REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

## தீண்டாமை ஒழிப்பு!

அகமதாபாத், நவ. 8—

மெஹசானு மாவட்டக் கழகம், அந்த மாவட்டத்தில், தீண்டாமையை ஒழிக்கும் லட்சியத்திற்கு தீவிரமாக பாடுபடும் முதல் இரண்டு கிராமங்களுக்கு முறையே ரூ. 1000, ரூ. 500 பரிசு தர முடிவு செய்துள்ளது.

அரிசனங்கள் வாழும் பகுதிகளை சந்திகரித்தல், வழிபாடு செய்வதற்கான பொது இடங்களை அமைத்தல், கிராமத்தில் உள்ள எந்தக் கிணற்றிலும் அரிசனங்கள் தண்ணீர் எடுத்து உபயோகிக்க அனுமதித்தல், இன்னும் பொதுவாக, அரிசனங்களுடன் இதரர்கள் சோதர மனப்பான்மையுடனும், சமமாகவும் பழகும் ஒரு நிலைமை உருவாக்குதல் போன்ற காரியங்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென மாவட்டக் கழகம் முடிவு செய்திருக்கிறது.

மலர் 2] சென்னை: ஐப்பசி 24உ செவ்வாய் (9—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 25உ புதன் (10—11—54) [இதழ் 127

# 'தமிழிலும் கணக்கு வைக்க முடியாது! இந்தியிலும் கணக்கெழுத முடியாது!'

## 'தாய்மொழியான குஜராத்தியிலும் மார்வாரியிலுந்தான் கணக்கு எழுதுவோம்!'

### 40,000 வட நாட்டு வர்த்தகர்கள் சார்பில் சர்க்காருக்கு மனு

சென்னை நகரிலும், அதைச் சார்ந்த மற்ற பகுதிகளிலும் ஏறத்தாழ 40,000 மார்வாரி—குஜராத்தி வடநாட்டினர் பலவிதமான வர்த்தகங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் இதுவரை, அவரவர்களுடைய தாய் மொழியில்தான் கணக்கு எழுதிக்கொண்டு வருகின்றனர்.

வடநாட்டு வியாபாரிகளின் மேற்படி போக்கை இனியும் அனுமதிக்க முடியாது எனவும், 1955 ஏப்ரல் முதல் தேதி முதல் அவர்கள், தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய ஏதாவது ஒரு மொழியில் கணக்கெழுத வேண்டுமெனவும் சென்னை அரசாங்கம் ஏற்கனவே ஒரு உத்திரவைப் பிறப்பித்திருந்தது.

அந்த உத்திரவைத் திரும்பப் பெறுமாறும், எப்பொழுதும்போல் சொந்தத் தாய்மொழியில் கணக்கு வைக்க வடநாட்டு வியாபாரிகளை அனுமதிக்க வேண்டுமெனவும் ஒரு மனுவை சென்னை சர்க்காருக்கு, மேற்படியார் சங்கம் கொடுத்திருக்கிறது.

தங்கள் போக்கை ஆதரிக்க வேண்டுமெனக் கோரியிருப்பதுடன், பிரச்சினைக்கான பரிகாரமாக, வருமானத் துறையில் இந்தி, குஜராத்தி, மார்வாரி மொழி தெரிந்தவர்களை குமாஸ்தாக்களாக நியமித்திருப்பது போல், அம்மொழிப் பயிற்சியுடையவர்களை சென்னை சர்க்காரிலும் குமாஸ்தாக்களாக நியமித்துக்கொள்ளுவது நலம் என்றும், அச்சங்கம் யோசனை தந்துள்ளது.

சில நாளைக்குமுன், மார்வாரி வியாபாரி சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்ட நிதி அமைச்சரிடமும், மேற்படி கோரிக்கையை சங்கத்தவர் வலியுறுத்தியுள்ளனர்.

## காங்கிரஸ் மாநாடு

### பிரதிநிதிகள் தேர்வில் தகராறு

#### பெப்சுவில் தேர்தல் ஒத்திப் போடப்படுகிறது

அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டிற்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பதில், பெப்சு மாநிலத்தில் ஏராளமான பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

அந்தப் பிரதேசக் காங்கிரஸ் தலைவரான சர்தார் அவ்தர்சிங், புது டில்லிக்கு காங்கிரஸ் தலைமையுடன் பேச்சு வார்த்தைகள் நடத்த அழைக்கப்பட்டிருந்தார்.

அதன் விளைவாக, இப்போது சென்னையில் நடைபெறும் மாநாட்டிற்கான பிரதிநிதிகள் தேர்தல் ஒரு மாத காலத்திற்கு ஒத்திப் போடப்பட்டுள்ளன.

சில பகுதிகளில் அங்கத்தினர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. மொத்தம் உள்ள 35 தொகுதிகளில் குறைந்தது 6 தொகுதிகளிலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். ஏனெனில், மாநாட்டிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான அளவு அங்கு (அதாவது 500 அங்கத்தினர்கள்) இருக்கவேண்டும் என்கிற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சட்டதிட்டப்படி உறுப்பினர்கள் இல்லையென்பதேயாகும்.

## ஆசிய - ஆப்பிரிக்க மாநாடு

### 17 நாடுகள் அழைப்பை ஏற்றுள்ளன

இந்தோனேஷியாவில் அடுத்த பிப்ரவரியில் நடைபெற இருக்கிற ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டிற்கான அழைப்பை, இதுவரை 11-நாடுகள் ஏற்றுக்கொண்டன.

ஆப்கானிஸ்தான், பர்மா, இலங்கை, எகிப்து, எத்தோபியா, இந்தியா, ஈரான், ஈராக், லெபனன், லிபெரியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சவூதி அரேபியா, சிரியா தாய்லந்து, எமன் ஆகிய நாடுகள் அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ள —17 நாடுகளுக்குள்ளானவை யாகும்.

இந்தியா, இந்தோனேஷியா, இலங்கை, பர்மா, பாகிஸ்தான் ஆகிய கொழும்பு நாடுகள், முன்னின்று நடத்தும் இந்த மாநாட்டிற்கான நிகழ்ச்சி நிரலையும் அவைகளே தயாரிக்கும் என்றும், இது பற்றி ஆலோசிக்க அடுத்த மாதத்தில் இந்தோனேஷியாவில் கொழும்பு நாடுகள் கூடுமென்றும், அந்த மாநாட்டில் காலனிக் கொள்கை எதிர்ப்பு மிக முக்கியமான பொருளாயிருக்குமெனவும் தெரிய வருகிறது.

## சோவியத் தொழில் நுட்ப தூதுக் குழு

### இந்தியா வருகை

புதுடில்லி, நவ. 6—

இந்தியாவில் எஃகுத் தொழிற்சாலையொன்றை ஏற்படுத்துவதற்கான திட்டத்தின் நுட்பத்துறை அம்சங்களையும் ஆராய்ந்தறிய, சோவியத் தொழில் நுட்ப தூதுக் குழுவொன்று இம்மாதம் மூன்றுவது வாரத்தில் புதுடில்லி வந்துசேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தூதுக் குழுவில் 12 நிபுணர்கள் உள்ளனர்.

## 'எதிரிகளை அழிக்கும் அறங்கூறு மன்றம்'

### 'தங்கள் சவக்குழியை தாங்களே தோண்டிக்கொள்ளும் கொடுமை'

பர்மா கம்யூனிஸ்டுகளின் 'செங்கிஸ்கான்' போக்கு!

ரங்கூன், நவ. 7—

பர்மா கம்யூனிஸ்டுகள் பலமுறை திரும்பத் திரும்ப இராணுவத்தினரிடம் தோல்வி கண்டனர்; அதன் பயனும் ஆத்திரமடைந்துள்ள அவர்கள், பெகு மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களில் அட்டூழியமும், கொடுமையும் புரிய ஆரம்பித்துள்ளனர் எனச் சொல்லப்படுகிறது.

கம்யூனிஸ்டுகளின் பலம் மிக்க கோஷ்டி ஒன்று சமீபத்தில் கிராமம் ஒன்றில் புகுந்து தங்கள் விரோதிகள் என்று கருதுவதாகக் கூறி 20 கிராமவாசிகளின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களை எல்லாம் தேடினர்.

இறுதியாக அவர்களில் 12 பேர்கள் மட்டுமே அகப்பட்டனர்.

ராணுவத்தினருக்கு உதவியாக ஒத்துழைத்தனர் என்று குற்றம் சாட்டி விசாரித்து, அவர்களுக்கு மரண தண்டனை விதித்தனர், கம்யூனிஸ்டு குழுவினர்.

தண்டனை பெற்ற 12 பேர்களும், சுட்டு வீழ்த்தப்படுவதற்கு முன், தங்கள் சவக்குழியை தாங்களே தோண்டவேண்டும் என்றும் உத்திரவிடப்பட்டதாம்.

அப்பாவிகளான அந்த கிராம மக்கள் 12 பேரும் கம்யூனிஸ்டுகளின் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாயினர்.

பின்னர் கம்யூனிஸ்டு கோஷ்டி, வயல்களில் வேலை செய்திருந்த பலரையும் கொன்று குவித்தனர் எனவும், செய்திகள் கூறுகின்றன.

சில நாட்களுக்குப் பிறகு மேலும் எட்டு கிராமவாசிகள் அதே 'குற்றத்'திற்காக சுட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

## தூத்துக்குடி சதி வழக்கு

### தண்டனையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் அப்பீல்

#### தண்டனைபெற்ற தோழர்கள் ஜாமீனில்விடுதலை

தூத்துக்குடி திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி, நடராஜன் முதலிய 25 தோழர்களுக்கும் மூன்று மாதம் முதல் இரண்டு வருடம் வரை கடுங்காவல் சிறைத் தண்டனை தரப்பட்டிருப்பதை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் 'அப்பீல்' செய்யப்பட்டிருக்கிறது.

தண்டிக்கப்பட்ட தோழர்கள் அத்தனை பேரையும் ஜாமீனில் விடுதலை செய்யக் கோரியும், மனுச் செய்யப்பட்டது.

நீதிபதி சோமசுந்தரம் அவர்கள், ஜாமீன் மனுவினை ஏற்றுக்கொண்டு தண்டிக்கப்பட்ட 25 தோழர்களையும், ஜாமீனில் விட நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சென்ற மாதம் 27-ந் தேதியன்று தூத்துக்குடி சதி வழக்கை விசாரித்த நெல்லை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி, "புதுக்கிராம சம்பவத்திற்கும் கழகத்திற்கும் தொடர்பில்லையென்றும், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதின் எதிரொலியே அச்சம்பவம் என்றும் எவ்வித தாக்குதலை நடத்தவும், சதி நடந்தது என்பது சர்க்காரால் நிரூபிக்கப்படவில்லை என்றும், ரயிலை நிறுத்துவதற்கு மட்டுமே திட்டமிடப்பட்டது," என்றும் கூறி, குற்றம் சாட்டப்பட்டவர்களில் 25 பேர்களை விடுவித்துவிட்டு, 25 பேர்களுக்கு சிறைத் தண்டனை தந்து தீர்ப்பளித்தார்.

தி. மு. கழகம் தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்துள்ளது.

தோழர்கள் 25 பேர்களும், தலா ரூ. 1,000 சொந்த ஜாமீன் பேரிலும், ரூ. 1,000 இரண்டு நபர் ஜாமீன்பேரிலும் விடுதலை செய்யப்படுவர் என உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் அவர்களிடம் ஜாமீன் மனு தாக்கல் செய்து, தோழர்களை வெளிக்கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை தலைமை நிலையம் மேற்கொண்டுள்ளது.

தலைமைக் கழகத்திற்காக சென்னை பிரபல வழக்கறிஞர் கே. நாராயணசாமி அவர்களும், அவருக்கு உதவியாக டி. சுந்தரம், எஸ். சாமிக்கண்ணு ஆகியோரும் ஆஜரானார்கள்.

## 'ஆரம்ப உடன்படிக்கையை முதலாளிகள் மதிப்பதில்லை'

### தினசரி 17-மணி நேரம் உழைக்கும் கொடுமை

ஒப்புக்கொண்ட ஊதியமும் கொடுப்பதில்லை;
குறைந்த ஊதியமும் காலத்தில் தருவதில்லை!

#### இந்திய சர்க்காரிடம் மலாயா வர்த்தக ஊழியர் முறையீடு

★

மலாயாவில் உள்ள இந்திய வர்த்தக ஊழியர்கள், அங்குள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்களால் எவ்வாறு கொடுமைப் படுத்தப்படுகிறார்கள் என்பதை விளக்கி, செலாங்கூர் வர்த்தக ஊழியர் சங்கம், உடனடியாகப் பரிகாரம் தேடும்படி, இந்திய சர்க்காரை வேண்டிக் கொண்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் முதல் 17 மணி நேரம் வரையில் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறது.

இந்தியாவிலிருந்து ஊழியர்களை இறக்குமதி செய்யும் நேரத்தில் ஊழியர்களுடன் தாங்கள் செய்துகொண்ட உடன்படிக்கையை மதித்து நடக்க வர்த்தகர்கள் மறுக்கிறார்கள்.

உடன்படிக்கையில் ஒப்புக்கொண்டுள்ள கூலியை ஊழியர்களுக்குக் கொடுக்காததோடு, கொடுக்க ஒப்பும் குறைந்த கூலியையும் காலா காலத்தில் வர்த்தகர்கள் கொடுப்பதில்லை.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 9—11—1954 செவ்வாய்

# பிரகாசம் மங்கிற்று!

மொழியை அடிப்படையாகக் கொண்டு, ஆந்திர மாநிலம் சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில் உருவெடுத்தது. ஆந்திரர்களின் பல ஆண்டு கோரிக்கை இறுதியில் வெற்றி பெற்றது கண்டு, ஒவ்வொரு ஆந்திரரும் இறும்பூதெய்தினர். புதிய ஆந்திர மாநிலத்திற்கு நமது கழகமும் தனது வாழ்த்தை அனுப்பிற்று.

ஆந்திர மாநில அமைப்புக்கு, பெரும்பாலும் ஒவ்வொரு ஆந்திரரும் தங்களால் கூடுமான வரை முயன்றிருக்கின்றனர். அமைதியான நேரடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்; பலாத்காரச் செயல்களையும் கையாண்டுள்ளனர், தமது கோரிக்கையில் வெற்றி காண ஆந்திரர்கள்.

வெள்ளையர் வெளியேறிய உடனே உருவாக்கப்பட்டிருக்க வேண்டிய ஆந்திர மாநிலம் உருவாகாததற்கு, ஓரளவிற்கு சில ஆந்திரத் தலைவர்களின் வரம்பு கடந்த பேராசையும் காரணமாகும்; மற்றோர் அளவிற்கு, மொழி அடிப்படையில் மாநிலங்களை உருவாக்கக் கூடாது என, வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்களின் மூளையில் திடீரென்று தோன்றிய பேரச்சமும் காரணமாகும். சில ஆந்திரத் தலைவர்களின் அசாத்திய கோரிக்கையான 'மதராஸ் மனதே' என்ற நியாயமற்ற கோரிக்கையை ஒரு புகலாகக் கொண்டு, மொழிவழி மாநிலங்களை உருவாக்கக் கூடாது என்ற தனது திடீர் முடிவை நிறைவேற்றிக் கொள்ளப் பார்த்தனர், வடநாட்டு காங்கிரஸ் ஆதிபத்தியக்காரர்கள்.

சென்னை சேர்க்கப்படாத ஆந்திர மாநிலத்தையாவது உடனடியாகக் கண்டாக வேண்டுமென ஆந்திர இளைஞர்கள் வீறு கொண்டெழுந்தனர். பொட்டி சீராமுலு ஆந்திர மாநிலத்திற்காக உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்தார். உடன், காங்கிரஸ் மரபுப்படி தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன; தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன; புகைவண்டிகள் கொள்ளையிடப்பட்டன—கொளுத்தப்பட்டன. இந்தியப் பேரரசும் தனது உறுதியை மாற்றிக்கொண்டு ஆந்திர மாநிலத்தை அக்டோபர் முதல் நாளன்று உருவாக்கிவிட்டது. ஆந்திர மாநிலத்தின் முன்னாள் வரலாறு இவ்வளவுதான்.

ஆந்திர மாநிலம் தேவை என்பதில் ஆந்திரத் தலைவர்களிடம் காணப்பட்ட ஒருமைப்பாடு, அவர்களிடம் காணப்பட்ட அரசியல் கோட்பாடுகளில் அறவே கிடையாது. குறிப்பிட்ட அரசியல் கோட்பாட்டில், அவர்களில் சிலருக்கு இருந்த உறுதியைக்காட்டிலும், பதவி வேட்டையாடுவதில் அதிக ஊக்கம் இருந்துவந்தது. அந்தப் பதவி மோகம் ஆந்திர கேசரி பிரகாசம் பந்துலுகாரு அவர்கள் இடத்திலும், காங்கிரஸ் தலைவர் சஞ்சீவி ரெட்டிகாரு அவர்களிடத்திலும், மற்றவர்களிடத்தில் இருந்ததைக்காட்டிலும் கொஞ்சம் கூடுதலாக இருந்தது. காங்கிரஸ் கட்சிக் குட்டையிலேயே ஊறிய மட்டையான பிரகாசம்காரு, அந்தக் கட்சியை விட்டு வெளியேறினதோடு மட்டுமல்லாமல், அதை எதிர்க்கும் போர்க்கோலமும் பூண்டார். முதல் மந்திரி பதவி கிடைக்கிறது என்ற நிலை ஏற்பட்டதும், குடி புகுந்த கட்சியை விட்டுத் துறந்து, பிறந்த கட்சியில் புகுந்து புதிய பதவியும் பெற்றார் என்றால், அவருடைய அரசியல் சோரத்திற்கு, குறிப்பிட்ட ஒரு கொள்கையைக் காரணமாகக் கொள்வதை விட, அவருக்கு இருந்துவந்த கட்டுக்கடங்காத பதவி மோகத்தைத்தான் காரணமாகக்கொள்வதற்கு அறிவியல் துறையில் இடமுண்டு.

ஆந்திர கேசரிக்கோ அகவை 86 ஆகிறது. புதிய ஆந்திர மாநிலத்தில் உருவான முதல் அமைச்சர் குழுவின் முதல் அமைச்சராக இருக்கும் உயர்ந்த பேறு, அவர் விருப்பப்படி கிடைத்தும் விட்டது. ஆனால் அந்தப் பேறு, அவரிடத்தில் அதிக நாட்கள் தங்கி இருக்கவில்லை. 403-நாட்களுக்குள்ளாக, அது, அவரை ஏமாற்றிவிட்டது.

ஆந்திர அமைச்சர் குழு மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையின்மை தீர்மானத்திற்குச் சாதகமாக 69 வாக்குகளும், எதிராக 68 வாக்குகளும் கிடைத்துவிடவே, பொறுப்பிலிருந்து விலக வேண்டிய கட்டாயம் அமைச்சர் குழுவிற்கு ஏற்பட்டுவிட்டது. சட்டசபை தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு, ஆந்திரகேசரி, அமைச்சர் குழு பதவியிலிருந்து விலகியும்விட்டது. ஆந்திரகேசரியின் அரசியல் வாழ்வு இத்துடன் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இனியும் அவர் அரசியல்துறை எனும் ஆடிக்காற்றில் அடிபடும் இலவம் பஞ்சாக இருந்துவர மாட்டார் என்றே நம்புகிறோம்.

ஆந்திர மாநிலம் சென்னை மாநிலத்துடன் இணைந்திருந்த காலத்தில் முதல் அமைச்சராக ஆந்திர கேசரி இருந்து, ஓராண்டு காலம் முடிவுற்றதும் வெளியேற்றப்பட்டதிலிருந்து, மீண்டும் அப்பதவியில் அமர அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளோ எண்ணத் தொலையாதன. அவரை முதலமைச்சராகக் கொண்டு கூட்டு மந்திரி சபை அமைக்க வேண்டும் என்ற முயற்சியையும், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கெடுத்தொழித்தார். அதனால், அரசியல் முதியவரான ஆந்திர கேசரியின் ஆசையில் மண் விழுந்தது.

ஆந்திர மாநில அமைப்பு, பிரகாசத்தின் தணியாத விருப்பத்தைத் தணியச் செய்ய ஒரு வாய்ப்பாயமைந்தது. சென்னை மாநிலத்தில் பொதுவுடைமையினருடன் கூடிக் கொண்டு பதவி பெற முயற்சித்தது போலவே, புதிய ஆந்திர மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியுடன் கூடிக்கொண்டு பதவி பெற பாடுபட்டார் அவர்; அதில் வெற்றியும் பெற்றார்.

எந்தக் காங்கிரஸ் கட்சி, ஆந்திரகேசரியின் பதவிபெறும் நோக்கத்தை நிறைவேற்றி வைத்ததோ, அதே காங்கிரஸ் கட்சி அவரைப் பதவியிலிருந்து வீழ்த்தியும் இருக்கிறது. ஆந்திர காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக இருக்கிற சங்கர ரெட்டியார் அவர்களே, பிரகாசம் மந்திரிசபைக்கு எதிராக வாக்களித்து இருக்கிறார் என்பது, பிரகாசம் மந்திரி சபை வீட்சியை ஆந்திர காங்கிரஸ் கட்சியும் விரும்புகிறது என்ற உண்மையைத்தானே காட்டுகிறது? அதனால்தான் போலும், 'நம்பிக்கையின்மை தீர்மானத்தின் முடிவு எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கவில்லை; முடிவு நான் எதிர்பார்த்ததே' என ஆந்திரகேசரி அறிவித்துள்ளார்!

முடிவை முன்கூட்டியே தெரிந்திருக்கிற பிரகாசம், தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு முன்னதாகவே, தனது முதல் அமைச்சர் பதவியைத் துறந்திருக்க வேண்டும். அப்படி அவர் செய்திருந்தாலாவது, மறுபடியும் அரசியல் வானில் தலைகாட்ட, அவருக்கு, ஒரு வாய்ப்பு குறைந்த அளவிலாவது கிடைத்திருக்கும். அந்தச் சிறு வாய்ப்பையும் தவறவிட்டு விட்டார் ஆந்திர கேசரி. ஒரு பதவியைத் துறப்பது என்பது ஒருவர் விருப்பத்துடன் செய்யக்கூடிய செயலல்ல என்ற உண்மை ஆந்திர கேசரியின் போக்கால் உறுதியாகிறது. காங்கிரஸ் கட்சியினரின் பதவி வேட்டைக்கு, ஆந்திர கேசரியின் அரசியல் போக்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டு. இதை ஒரு படிப்பினையாக அரசியல் பொது வாழ்வினர் கொள்ள வேண்டும். பிரகாசத்தின் அரசியல் பொது வாழ்வு மங்கிற்று! இருந்தாலும், ஆச்சாரியார் போன்று 'சக்ரவர்த்தித் திருமகன்' ஆராய்ச்சியில் இறங்கமாட்டார் என்பது முக்காலும் உறுதி!

## சிந்து மந்திரி சபைக்கு சீட்டு கிழியும்!

### சட்டசபையும் கலைக்கப்படும்?

சிந்து கவர்னர் மர்ம்தோத் நவாப், இன்னும் ஓரிரண்டு தினங்களுக்குள்ளேயே பீர்ஜாதா மந்திரி சபை மீது நிர்வாக ஒழுங்கீனக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, அம்மந்திரி சபையை 'டிஸ்மிஸ்' செய்துவிடுவார் என்றும், சட்டசபையையும் கலைத்துவிடுவார் என்றும் தெரிகிறது.

இவ்வாண்டு 'பட்ஜெட்'டின் உபமான்யக் கோரிக்கைகளை நிறைவேற்ற, சிந்து சட்டசபை இத்திங்கள் 15-ந் தேதியன்று கூடவிருக்கிறது. அதற்குள்ளாகவே, சட்டசபையிலுள்ள பல்வேறு தலைவர்கள் கராச்சி சென்று பீர்ஜாதா மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவும், அதை எதிர்க்கவும் ஆகவேண்டிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனராம்.

---

ஆந்திர சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்யும் சிப்பந்திகள் தங்குவதற்காக மேலும் ரூ. 40,50,000 செலவில் 500 விடுதிகளைக் கட்டித்தரும் திட்டமொன்றை ஆந்திர மாநில சர்க்கார் அங்கீகரித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

# பக்ரா கால்வாய் நிர்வாகம் ஊழல், நிறைந்துள்ளது!

## விசாரணை அவசியம் என்று தணிக்கைக் குழு அறிக்கை

சாந்திசார், நவ. 5—

"பக்ரா கால்வாய் நிர்வாகம் பற்றி தனி அதிகாரம் கொண்ட அமைப்பொன்றினால் விசாரணை செய்து வருவது விரும்பத்தக்கது மட்டுமல்ல; அது தவிர்க்க முடியாத அவசியமாகும்," என்று, பஞ்சாப் விதான் சபாவின் பொதுத் தணிக்கைக் குழு தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

இன்று, விதான் சபையில், தனது அறிக்கையை பார்வைக்கு வைத்திருக்கிற தணிக்கைக் குழு, 1950— '51-ம் ஆண்டு கணக்கு, 1952-ம் ஆண்டின் தணிக்கை அறிக்கை ஆகியவைகளை அக்குழு பரிசீலித்து பொதுப் பணத்தைச் செலவிடுவதில் போதுமான முன்னெச்சரிக்கையுடன் இருக்கவில்லை என்று கண்டித்திருக்கிறது.

கண்டிராக்டர்களுக்கு அதிக அளவில் நிலக்கரி கொடுக்கப்பட்டிருக்கிறது. பட்டியல்களை சரி பார்க்காததாலும், மேலதிகாரிகளின் உத்திரவுகள் குறிப்பிட்ட நேரத்தில் அமுல் செய்யப்படாததாலும், பல இனங்களில் அதிக பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கையிருப்பில் உள்ள பொருள்களை தணிக்கை செய்வது, இருப்பு மிச்சம் காட்டுவது, ரிசர்வில் இருக்கவேண்டிய அளவை நியமிப்பது இவை போன்றவைகளில் ஒழுங்கு காணப்படவில்லை.

பக்ரா கால்வாய்த் திட்ட அதிகாரிகளின் கீழ் ஏராளமான பொருள்கள் ஒப்படைக்கப்பட்டு இருக்கும் நிலையில், மேலே குறிப்பிட்ட நிர்வாகத் துறைகள் மூன்றிலும் விதி முறைகளைக் கடைபிடிக்காமையினால் இருப்பில் உள்ள பொருள்களில் சில நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா என்று எங்களால் நிச்சயமாகக் கூற இயலாவிட்டாலும், இப்படிக் கூறும் அளவிற்குப் பல புகார்கள் இடம் கொடுக்கின்றன.

திட்டமிடப்பட்ட வேலைகளுக்குப் பொருளாதார அனுமதி கிடைப்பதிலும் மிகவும் தாமதம் ஏற்படுகிறது. வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பத்து மாதங்கள் சென்ற பின்னரும் சர்க்காரின் பொருளாதார அனுமதி கிடைக்காததால் வேலை நடைபெறுவதில் பல தொல்லைகள் ஏற்படுவதாக அக்குழு தனது அறிக்கையில் மேலும் தெரிவிக்கிறது.

## ரூ. 3 லட்சம் பெறுமான அபினி

கல்கத்தா சுங்க இலாகா அதிகாரிகள் ரூ. 3 லட்சம் பெறுமான 17½ மணங்கு எடையுள்ள அபினியைக் கைப்பற்றினார்கள்.

'எஸ். எஸ். டாக்காங்' என்னும் கப்பலில், கள்ளத்தனமாக இந்த அபினியை ஹாங்காங்கிற்கு கடத்த இருந்தார்களாம்.

தோல் என்று கூறப்பட்ட மரப்பெட்டிகளில் இந்த அபினி மறைத்து வைக்கப்பட்டிருந்ததாம்.

# சோவியத் புரட்சி தினம்

## மாஸ்கோவில் - அணிவகுப்பு

சோவியத்தில் ஏற்பட்ட போல்ஷ்விக் புரட்சியின் 37-வது ஆண்டு விழா மாஸ்கோவில் சிறப்புடன் கொண்டாடப்பட்டது. மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் லெனின்-ஸ்டாலின் சமாதிகளின் மீது நின்று சோவியத் பிரதமர் மாலங்கோவ், இராணுவ அணிவகுப்புகள் தந்த மரியாதையை ஏற்றார் என்று தெரிகிறது.

இவருடன் சோவியத் இராணுவத்தின் தளபதிகளும், சர்க்கார் அமைச்சர்கள் முதலியோரும் நின்றனர்.

அணிவகுப்பைப் பார்வையிட்ட சோவியத் பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் பல்கானின் பேசுகையில், தமது சர்க்கார் போரை விரும்பவில்லை என்றும், ஆக்க வேலை செய்வதையே விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

# மக்கள் சபை காஷ்மீர் உறுப்பினர்கள்!

## நம்பிக்கையில்லை என்று தீர்மானம்!

ஸ்ரீநகர், நவ. 6—

ஜம்மு—காஷ்மீர் சட்டசபை, இந்திய மக்கள் சபையில் தங்கள் நாட்டின் சார்பாக உறுப்பினராக இருக்கும் நான்கு பேர் மீதும் நம்பிக்கையில்லை என்று தீர்மானித்தது.

மௌல்வி முகமது மசூதி, சோபி முகமது அக்பர், குலாம் காதிர், சௌத்ரி முகமது ஷாபி ஆகிய நால்வரும், மக்கள் சபை உறுப்பினர்களாக மேற்படி சட்ட சபையினால் நியமனம் செய்யப்பட்டவர்கள். இவர்கள் பல சந்தர்ப்பங்களில் காஷ்மீரின் நலனுக்கு விரோதமான முறையில் நடந்து கொண்டதன் மூலம், சபையின் நம்பிக்கையை இழந்துவிட்டவர்கள் என்றும், அவர்கள் இனி பிரதிநிதித்துவம் வகிக்க லாயக்கற்றவர்கள் என்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நால்வரும் ஷேக் அப்துல்லாவின் அனுதாபிகள் என்று கூறப்படுகிறது.

# லண்டன் உப தேர்தல்கள்

## கன்சர்வேடிவ் கட்சி வெற்றி

மக்கள் சபைக்கு, காலியாயிருந்த ஒரு தொகுதிக்கு நடைபெற்ற உப தேர்தல் ஒன்றில், சர்ச்சிலின் கன்சர்வேடிவ் கட்சியினர் சுலபமாக வெற்றி பெற்றுள்ளனர்.

கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த சர் சிட்னி மார்ஷல் உடல் நலக் குறைவின் காரணமாக அரசியலிலிருந்து ஓய்வு பெற்றார். அவரது தொகுதிக்கே தேர்தல் நடைபெற்றது.

| | |
|---|---|
| மேஜர் ரிச்சர்டு ஹார்ப்பிள்ஸ்: (கன்சர்வேடிவ்) | 21,930 |
| நார்மன் பௌல்டர் (தொழிற் கட்சி) | 11,023 |

10,907 ஓட்டுகள் அதிகம் பெற்று கன்சர்வேடிவ் அபேட்சகர் வெற்றி பெற்றார்.

## தொழிற் கட்சி வெற்றி

மோர்பெத் (நார்தாம்பர்லாந்து) தில் நடைபெற்ற சட்ட சபை உப தேர்தலில், தொழிற் கட்சியினர் வெற்றி பெற்றுள்ளனர்.

தொழிற் கட்சி அபேட்சகரான ராபர்ட் டெய்லர் என்பவர் காலமானதை யொட்டி இத் தேர்தல் நடைபெற்றது.

| | |
|---|---|
| வில்லியம் ஏவான்ஸ் (தொழிற் கட்சி) | 23,491 |
| ராபர்ட் எலியட் (கன்சர்வேடிவ் கட்சி) | 9,469 |

தொழிற் கட்சி அபேட்சகர், கன்சர்வேடிவ் கட்சியின் அபேட்சகரைக் காட்டிலும் 14,022 வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

# கொழும்பு முத்தமிழ் விழாவில் இரா. நெடுஞ்செழியன்

## பயன் தரும் தூய உயர் நெறியை வகுத்தவர் வள்ளுவர்

## கவிதை உலகில் புரட்சிப் பாதையை அழகியதாகப் பயனுள்ளதாகச் செப்பனிட்டவர் புரட்சிக் கவிஞர்

### முத்தமிழ் விழாவின் இரண்டு-மூன்றும் நாள் நிகழ்ச்சிகள்

கொழும்பு தமிழ்ச் சங்க பன்னிரெண்டாம் ஆண்டு நிறைவு முத்தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி (முதல் நாள் நிகழ்ச்சி விபரம் முன்னரே வெளியிடப் பெற்றுள்ளது) 16-10-54 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் துவக்கமாயிற்று. மாலை 3 மணியிலிருந்தே ஆடவரும் பெண்டிரும் சிறுவரும் சிறுமியரும் திரள் திரளாக மண்டபத்திலும், மண்டபத்தின் வெளியிலும் கூட ஆரம்பித்தனர்.

முதலில் நாதசுர வித்துவான் தோழர் ப. வெள்ளைச்சாமி அவர்களின் குழுவினரால் இனிய நாதசுர இரையரங்கு சிறப்பாகநடத்தப் பெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்குத் தமிழ்ச் சங்கத் தலைவரும், வழக்கறிஞருமான வே. அ. கந்தையா அவர்கள் தலைமை தாங்கி சுருக்கமாகத் தம்முன்னுரையை நிகழ்த்தினர்கள்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழியர் மகேசுவரி பாலகிருஷ்ணன் பி. ஏ., அவர்கள் "சங்க இலக்கியம் கண்ட பெண்கள்" என்னும் பொருள்பற்றி கருத்துமிகுந்த இனிய அரிய சொற்பொழிவுஆற்றினார்கள்.

பின்னர் சுமார் அரைமணி நேரம் தோழியர் பரிமளா தேவி விவேகானந்தா அம்மையாரின் இன்னிசையரங்கு நடைபெற்றது. அவர்கள் அழகிய தமிழ்ப் பாடல்களைப் பாடிக் கூட்டத்தினரை மகிழ்வித்தார்கள்.

இறுதியாக மக்களின் பெருத்த ஆரவாரத்திற்கிடையே தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் எழுந்து "வள்ளுவர் வகுத்தவாழும் நெறி" என்னும் பொருள் பற்றி ஏறக்குறைய இரண்டு மணி நேரம் அரிய ஆராய்ச்சிமிக்க அழகிய சொற்பொழிவு ஆற்றினார். திருக்குறளைப் பற்றி அறிய வேண்டும் என்ற ஆவல் தமிழ் மக்களிடையே இதுநாட்களில் எப்படியெல்லாம் பொங்கி எழுந்து காணப்படுகிறது என்பது பற்றியும், திருக்குறள் உலக இலக்கியங்களின் வரிசையில் எந்த வகையில் முன்னணியில் வைத்து எண்ணத்தகுந்ததாக அமைந்திருக்கிறது என்பது பற்றியும், திருக்குறள் எவ்வாறு எல்லாக் காலத்திற்கும், எல்லா நாட்டிற்கும், எல்லா மக்களுக்கும், எல்லா சமயத்தார்க்கும், எல்லாப் பிரிவினர்க்கும் ஏற்றதாக விளங்குகிறது என்பது பற்றியும், திருக்குறளில் பரிமேலழகராலும் பிறராலும் எப்படியெல்லாம் மறு ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றியும், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கூறியதுபோல் "வள்ளுவர் செய் திருக்குறளை மறு அற நன்குணர்" வேண்டியதன் அவசியம் என்ன என்பது பற்றியும், திருக்குறள் எப்படி அறிவுக்கு ஒத்த பயன் விளைவிக்கும் தூய உயர் நெறியை வாழும் நெறியாகப் பல்வேறு துறைகளிலும் வகுத்துக் காட்டுகிறது என்பது பற்றியும், தக்க மேற்கோள்களை ஆங்காங்குச் சுட்டிக் காட்டியும், குறட் பாக்களை விளக்கிக் காட்டியும் உணர்ச்சி ததும்பப் பேசினார். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வரைமுறை தாண்டாமல் இலக்கிய நயம் மேம்பட பேசிய பேச்சு தமிழ்ப் பேரறிஞர்கள், பெரியோர்கள், இளைஞர்கள், தாய்மார்கள், மாற்றுக் கருத்துடையார் ஆகிய அனைவர் உள்ளத்தையும் பெருவகையில் ஈர்த்தது என்னலாம்.

தலைவர் இரண்டொரு சொற்களில் முடிவுரை கூறக் கூட்டம் இரவு 9 மணி அளவிற்கு முடிவுற்றது. மழை இடை இடையே பெய்தபோதிலும் மண்டபத்திற்கு வெளியே கூடியிருந்த ஏராளமான மக்கள், மழையைப் பொருட்படுத்தாமல், அசையாமல் நின்று கேட்டது குறிப்பிடத்தக்கது. தாங்க முடியாத அளவு கூட்டம் மண்டபத்தின் உள்ளும், வாயிலண்டையிலும் இருந்ததால் கூட்டம் முன்னுக்கும் பின்னுக்கும் தத்தளிக்கும் வகையில் நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டன. இட நெருக்கடியும், மழையின் தொல்லையும் ஏற்பட்ட போதிலும் கூட்டத்தினர் அமைதியை நிலைநாட்டியது போற்றத் தகுந்ததாக இருந்தது.

### மூன்றும் நாள் நிகழ்ச்சி

17—10—54 ஞாயிறன்று முத்தமிழ் விழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சி சைவ மங்கையர் கழக மண்டபத்தில் காலை மாலை ஆகிய இரு வேளைகளிலும் நடைபெற்றது.

விழா நிகழ்ச்சி காலை 8-45மணிக்குத் துவங்கப்பெற்றது. தோழியர் ஜெயதேவி கிருஷ்ணராசா அவர்களின் இன்னிசையரங்கு நடைபெற்றது.

காலை நிகழ்ச்சிக்குத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வேறு அலுவலின் காரணமாக வர இயலாமற்போகவே, தோழர் வைரவப் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

முதலில் பட்டி 'மண்டபம்' நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர்கள் பண்டிதர் த. கனகரத்தினம், ஏ. சுப்பிரமணியம், ப. சிவசுப்பிரமணியம், எம். சேனாதிராசா, தோழியர் சு. ஆனந்தேசுவரி ஆகியோர் இலக்கியத்தில் காணப்படும் சில உருப்படிகளை எடுத்துக் கொண்டு அவற்றைப் பற்றிய குறைநலம் ஆராய்ந்தார்கள்.

பின்னர் 'கவியரங்கம்' ஒன்று கூட்டப்பட்டது. அதில் தோழர்கள் ஐ. ஜி. எம். செல்வராச, டபிள்யு. தம்பிராசா, சோ. சண்முகபாரதி, பண்டிதர் மு. ஆறுமுகம், பண்டிதர் ஜே. எஸ். ஆழ்வாப் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு கவிதைகள் இயற்றிப் பாடிக்காட்டினார்கள்.

தலைவர் முடிவுரையுடன் காலை நிகழ்ச்சி பகல் 12 மணிக்கு முடிவுற்றது.

பிற்பகல் நிகழ்ச்சி மாலை 4 மணிக்கு ஆரம்பமாயிற்று. கூட்டத்திற்குத் தலைமைதாங்க இசைந்திருந்த இலங்கை அமைச்சர் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதால், சங்கத் தலைவர் தோழர் வே. அ. கந்தையா அவர்களே தலைமை ஏற்றார்கள்.

செல்வியர் லெ. பிரகநாயகி, லெ. சுப்புலட்சுமி ஆகியோரின் இன்னிசையரங்கு மிக இனிமையாக நடந்தது.

இலங்கையிலிருந்து கோடியக் கரைவரையில் சுமார் 34 மைல்கள் அகலமுள்ள நீலத் திரைக் கடலை நீந்தி, உலகிலேயே நீண்ட தொலைவு நீந்துவதில் முதன்மையானவர் என்ற அழியாப் புகழை நிலை நாட்டிய தமிழ்வீரன் தோழர் மு. நவரத்தினசாமி அவர்களுக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் வ. மு. கனகசுந்தரம் அவர்கள் அழகிய பாக்களாலான வரவேற்பு இதழ் ஒன்றைப் படித்தளித்தார்.

தோழர் மு. நவரத்தினசாமி அவர்களின் ஆற்றலைப் பாராட்டியும், புகழ்ந்தும் தோழர்கள் வைரப்பிள்ளை, அருணாசல தேசிகர், ஜி. எம். பரமஜோதி, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது நவரத்தினசாமியின் ஆற்றல் மிக்க செயல் தமிழினத்தின் புகழை அகில உலக அரங்கில் ஓங்கி நிற்கச் செய்ததோடல்லாமல், தமிழ் மக்கள் பலரும் நெஞ்சுறுதி பெறுவதற்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது என்றும், தோழர் நவரத்தினசாமி கோடியக்கரையில் கரையேறியபோது முதன் முதலாக அவருக்கு மாலையிட்டு வரவேற்ற பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்ததாக இருப்பதால், அந்தக் கழகத்தைச் சேர்ந்த தாம், கொழும்பு நகரில் இருந்து அவரை வரவேற்கும் வாய்ப்பு பெற்றமைக்காகப் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்றும் பலவாறுகப் பாராட்டு மொழிகள் கூறி அன்புடன் வரவேற்றார்.

தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் தோழர் மதியாபரணம் அவர்கள் தமிழ்ச் சங்கத்தின் சார்பாகத் தோழர் நவரத்தினசாமி அவர்களுக்குத் தங்கப் பதக்கம் ஒன்றைப் பரிசாக அளித்தார்.

தோழர் நவரத்தினசாமி அவர்கள், தமக்கு வரவேற்பு அளித்தமைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் பேசும்போது, "நான் நீச்சல் முயற்சியில் ஈடுபடுவதற்கு என் அருமைக் குழந்தைகளை முதன் முதலில் உற்சாகம் ஊட்டியவர்களாவார்கள். என்னுடைய முயற்சி பைத்தியக்காரத்தனமான செயல் என்று கூறி பலர் என்னை எளனம் செய்தார்கள். யார் யார் என்னை எளனப்படுத்தினார்களோ அவர்களெல்லாரும் நான் என்னுடைய முயற்சியில் வெற்றி பெற்றுத் திரும்பியவுடன் என்னை மிகவும் பாராட்டத் தலைப்பட்டுவிட்டார்கள். நான் கோடியக்கரையில் கரையேறும்போது முதன் முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தார்தான் எனக்கு மாலை சூட்டி என்னை அன்புடன் வரவேற்றார்கள். நான் வெற்றி பெற்றதற்கு என்னுடைய மனோதிடந் தான் காரணம். இந்நாட்டு மக்களனைவர்க்கும் உற்சாகம் ஊட்ட வேண்டும் என்றே நான் இம்மாதிரிக் கூட்டங்களில் கலந்துகொண்டு வருகிறேன்" என்று குறிப்பிட்டார்.

இளந் தோழர் லெ. வைத்தியநாதன் அவர்களின் வயலின் இசையரங்கு அடுத்து நடைபெற்றது. இளந் தோழர் வைத்தியநாதன் ஆண்டில் மிக இளைஞராகக் காணப்படினும், இசையறிவில் மிக முதிர்ந்தவராகவே காணப்பட்டார். அவரின் வயலின் இசையரங்கு கூட்டத்தினரைப் பெரிதும் மகிழ வைத்தது.

பின் இலங்கை அரசினரின் மத்திய பாடசாலைத் தமிழாசிரியர் தோழர் பண்டிதர் மு. ஆறுமுகம் அவர்கள் 'கவிதா உலகம்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார். கூட்டம், சமாளிக்க முடியாத அளவில் மண்டபத்தின் உள்ளும் புறமும் நின்றதால் அவர் தம் சொற்பொழிவைச் சுருக்கமாகவே முடித்துக்கொண்டார்.

அடுத்துத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "புரட்சிக் கவிஞர்" என்னும் பொருள் பற்றி அரிய உணர்ச்சிமிக்க, வீரம் பொருந்திய சொற்பொழிவு ஆற்றினார். வளைந்து நெளிந்து பணிந்து சென்றுகொண்டிருந்த 'கவிதை உலகை'க் காலஞ்சென்ற பாரதியார் எப்படிப் புரட்சிப் பாதைக்கு இழுத்து வந்தார் என்பது பற்றியும் பாரதியார் துவக்கிக் கொடுத்த புரட்சிப்பாதையைச் செப்பனிட்டு அழகியதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கிய பெருமை எப்படிப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனைச் சார்ந்ததாகும் என்பதுபற்றியும், புரட்சிக் கவிஞரின் வாழ்க்கை வரலாறு பற்றியும், அவர் புரட்சி உள்ளங் கொள்வதற்குப் பாண்டிச்சேரி வாழ்க்கையும் பிரெஞ்சு இலக்கியங்களும் எந்த அளவுக்குத் துணை செய்வனவாக அமைந்திருந்தன என்பது பற்றியும், புரட்சி மணம் அவரது செய்யுட்களில் கமழும் விதத்தைப் பற்றியும், இயற்கை அழகு, காதல், வீரம், புரட்சி, சீர்திருத்தம், நகைச்சுவை, தமிழார்வம், சொல்லழகு, பொருட்செறிவு ஆகியவையெல்லாம் புரட்சிக் கவிஞர் கவிதைகளில் எப்படியெல்லாம் சிறந்து விளங்குகின்றன என்பதை எடுத்துக்காட்டுகளால் உணர்ச்சி ததும்ப விளக்கிக்காட்டியும் கேட்பார்ப்பிணிக்கும் தன்மையில் அரியமுறையில் சொற்பொழிவு ஆற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் "சிரிக்காதே" என்ற ஓரங்க நாடகம் இளைஞர்களால் நடித்துக்காட்டப்பெற்றது. தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் தோழர் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் அவர்கள் மூன்று நாள் நிகழ்ச்சிகளுக்கும் சேர்த்து எல்லோர்க்கும் நன்றியுரை நவின்றார்.

17—10—54-ம் நாள் காலையிலிருந்து தொடர்ந்து பெருமழை பெய்தும் விழாவிற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து குழுமியிருந்தனர். மழையைப் பொருட்படுத்தாமல் மண்டபத்தின் வெளியிலும், சாலை நெடுகிலும் ஏராளமான மக்கள் அமைதியாக நின்று சொற்பொழிவுகளைக் கேட்டுக்கொண்டிருந்தது மிகவும் போற்றத்தக்கதாகும். இதற்கு முன்னால் நடைபெற்ற தமிழ்ச் சங்க ஆண்டு விழாக்களில் இவ்வாண்டு கூடியதைப் போன்றதொரு மாபெரும் கூட்டம் கூடியதே இல்லை என்று தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் தோழர் வ. மு. கனகசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முத்தமிழ் விழாவில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டது, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு நல்ல பெருமையையும், புகழையும் தேடித் தந்ததோடு மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தவரைப் பற்றித் தவறாக எண்ணிக்கொண்டிருந்தவர்கள் தங்கள் கருத்துக்களை மாற்றிக்கொள்ளும் படியான சூழ்நிலையையும் உருவாக்கித்தந்தது.

## ❋ சென்னையில் குறள் நெறி விழா ❋

சென்னை, நவ. 6—

சென்னை நுங்கம்பாக்கம் குறள் நெறிக் கழகத்தினர் அக்டோபர் 23 முதல் 28 வரை. ஏற்பாடு செய்திருந்த குறள் நெறி விழாவை யொட்டி 23-ம் நாள் காலை மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. சென்னையில் விடாது பெய்த அடை மழை காரணமாக ஏனைய விழா நிகழ்ச்சிகள் இரண்டு நாட்கள் தள்ளி வைக்கப்பட்டு 25—10—54 முதல் துவங்கி 30—10—54 முடிய நடைபெற்று இனிது முடிந்தன.

23—10—54 காலை 10 மணியளவில், திருவள்ளுவரின் உருவப் படம் யானை மீது வைக்கப்பட்டு, நுங்கம்பாக்கம் வடவண்டை மாட வீதியிலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய தெருக்களின் வழியே வந்து பிற்பகல் 2 மணிக்கு முடிவுற்றது. ஊர்வலத்தில் கதிர்வேல் குழுவினர் நாதசுர இன்னிசை வழங்கினர். மயில் நடனம் போன்ற நிகழ்ச்சிகளும் ஊர்வலத்தில் இடம் பெற்றன.

ஊர்வலம் விழாப் பந்தலை வந்தடைந்ததும் திருக்குறளார் முனிசாமி அவர்கள் விழாவினைத் துவக்கிவைத்து சிறந்த கருத்துரையொன்று நிகழ்த்தினார். மழை காரணமாக அன்றைய நிகழ்ச்சி இத்துடன் முடிவுற்றது.

நுங்கம்பாக்கம் அவன்யூ சாலைத் திடலில் அமைக்கப்பெற்றிருந்த அணிபெரு பந்தலில் 25—10—54 மாலை 5 மணிக்கு விழா நிகழ்ச்சிகள் துவங்கின. விழாத் துவக்கத்தில் வரவேற்புக் குழுத் தலைவர் திரு. வ. சங்கரநாராயணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். வ. கு. பொதுச் செயலாளர் திரு. பூ. கணேசன் தலைவரை முன் மொழிந்து சிறிது நேரம் பேசினார். தோழர் க. அப்பாதுரை அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். தலைவர் தம் உரையில், வள்ளுவர் தமிழ் மரபில் பிறந்து உலகியல்புகள் அனைத்தையும் முற்றும் உணர்ந்த முதற் பெரும் புலவர் என்றும், உலக அறிவுநூலை அளித்த பேரறிஞர் என்றும் குறிப்பிட்டார்.

தோழர் கண்ணதாசன் பேசுகையில், திருக்குறளின் முதல் குறளுக்குப் பரிமேலழகர்கொண்ட உரைக்கும், பகுத்தறிவுப் புலவர்கள் கண்ட உரைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கி, 'பகவன்' என்ற சொல் பகலவனைத்தான் குறிக்கும் என்பதை வலியுறுத்தினார். மேலும் வள்ளுவனாரின் சொல்லமைப்பு முறையினையும், கருத்தாழத்தையும் எடுத்து விரித்துரைத்தார்.

திருமதி பி. பி. இராஜராஜேஸ்வரி பேசுகையில், இன்பத்துப் பாலில் சில மேற்கோள்கள் காட்டி வள்ளுவரின் சொன்னயத்தையும், பொருள் நயத்தையும் விளக்கினார்.

தோழர் நன்னன், குறள் நெறிச் சிறப்பைக் குறித்துச் சிறிதுநேரம் பேசியபின், தோழர் மு. கருணாநிதி பேசுகையில் "இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் வல்லது அரசு" என்ற குறளை எடுத்துக் காட்டி, இன்றைய ஆட்சியாளருக்கு அறிவுறுத்தினார்.

### இரண்டாம் நாள்

26—10—54 மாலை 5 மணிக்கு இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் துவங்கின. தோழர் க. அன்பழகன் விழாவிற்குத் தலைமையேற்றார். தலைவரின் சிறப்பான முன்னுரைக்குப் பின் திரு. வடிவேலு, வழக்கறிஞர் பி. ஆர். கோகுலகிருஷ்ணன், திரு. வை. பொன்னம்பலனார், திரு. காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் திருக்குறளின் அறநெறிகளைச் சிறப்பித்துப் பேசினர்.

இரவு 10 மணிக்கு மணிவண்ணன் குழுவினரின் "கண்ணகி" (வழக்குரை காதை) ஓரங்க நாடகம் நடைபெற்றது.

### மூன்றும் நாள்:

27—10—54 மாலை 4 மணிக்குத் துவங்கியது. செல்வி கௌசல்யா தமிழிசை விருந்தளித்தார். மாலை 5 மணிக்கு சொற்பொழிவுகள் துவங்கின. திரு. அ. மு. பரமசிவானந்தம் தலைமையேற்று குறள் நெறி பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# ஆந்திர அரசியல் நெருக்கடி!

## காங்கிரஸ் செயற்குழுவின் குழப்பம்

### முடிவேதும் காணாத மூடுமந்திரம்!

ஆந்திராவின் நிலைமை பற்றி காங்கிரஸ் செயற்குழு விவாதிக்கையில், சஞ்சீவி ரெட்டியும், கோபால ரெட்டியும் ஆந்திர மந்திரி சபையின் இராஜிநாமாவைப் பற்றி விளக்கியிருக்கின்றனர்.

விரைவில் மறு பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமென்று இரு சாரார் தலைவர்களும் வற்புறுத்தியும், செயற்குழு ஒரு முடிவும் எடுத்துக் கொள்ளவில்லை.

ஆந்திராவில் 'காபந்து' சர்க்கார் ஏற்படக்கூடாது என்ற கருத்தை செயற்குழுவும், பார்லிமெண்டரி குழுவும் ஆதரித்துள்ளதாகத் தெரிகிறது. மக்கள் சபைக்குத் தேர்தல் நடத்துவதுபற்றி, கவர்னரின் யோசனைக்கே விட்டுவிடுவது என்ற கருத்தும் இங்குள்ளவர்களிடையே நிலவி வருகிறது.

சர்க்காருக்கெதிராக நம்பிக்கையின்மை தீர்மானத்தை ஆதரித்து வாக்குச் செய்த காங்கிரஸ் உறுப்பினர்களான என். சங்கர ரெட்டி, என். வெங்கட சுப்பிரமணியம் ஆகிய இருவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பார்லிமெண்டரி குழு முடிவு செய்து அவர்கள் இருவரையும் கட்சியிலிருந்து விலக்கிவைக்கவும் தீர்மானித்துள்ளது.

### பிரகாசம் தலைமையில் புது சர்க்கார்?

ஆந்திர அரசியலில் ஒரு புதிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. பழைய முதலமைச்சர் பிரகாசத்தையே மீண்டும் முதலமைச்சராகக் கொண்டு, பெரும்பான்மை ஆதரவு கொண்ட புது மந்திரி சபை ஒன்றை மீண்டும் அமைக்க முயற்சிகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

## எதிரிகளை அழிக்கும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்த்தப்பட்டனராம், கம்யூனிஸ்டுகளால்.

பெகு மாவட்டத்தில் உள்ள எல்லா கிராமவாசிகளுக்கும் அரசாங்க ராணுவத்துடன் ஒத்துழைப்பது "துரோகம்"; அக் 'குற்றம்' புரிபவருக்கு மரணம் என எச்சரிக்கை தரப்பட்டுள்ளதாம், கம்யூனிஸ்டு குழுவினரால்.

வட பர்மாவில் உள்ள பாமோ எனுமிடத்திலிருந்து வந்துள்ள செய்தி அறிக்கைகள், காசின் மக்களிடையேயும் கம்யூனிஸ்டுகள் தோன்றியுள்ளனர் என்றும், அவர்கள், மருத்துவமனை, இராணுவ முகாம் இன்னும் கம்பியில்லாத் தந்தி முதலியன கொண்டு, தலைமைக் காரியாலயம் ஒன்றை மோமிக் பகுதியில் நிறுவியுள்ளனர் என்றும் சொல்கின்றன.

## துங்கபத்திரா அபிவிருத்தி

துங்கபத்திரா அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கத்திடம் ஐதராபாத் அரசாங்கம் ரூ. 20 கோடி கடன் கேட்டுள்ளதாக முதன் மந்திரி பி. ராமகிருஷ்ணராவ் அறிவித்துள்ளார்.

சுமார் 4½ லட்சம் ஏக்கர் பிரதேசம் இந்தத் திட்டத்தினுல் அபிவிருத்தி அடையுமாம்.

விவசாயிகளுக்கு 'தக்காவி' கடன்தர அரசாங்கத்திடம் பெறும் தொகையில் பெரும் பகுதி உபயோகிக்கப்படும் எனவும் அவர் கூறினுர்.

"துங்கபத்திரா பிரதேசத்தை அபிவிருத்தி செய்வது என்பது மிகக் கடினமான மகத்தானதொரு வேலை. விவசாயிகளிடையே அக்கரை இல்லாதிருக்கும் நிலைமேலும் அந்த வேலையைக் கடினமாக்கியுள்ளது," என்று முதன் மந்திரியார் குறிப்பிட்டாராம்.

### பம்பாய் முதன் மந்திரிக்குக்

## கருப்புக் கொடி!

### 'இந்து ராஜ்' கட்சியின் விபரீதப் போக்கு!

### கட்சிச் செயலாளர் கைது!

அகில இந்திய இந்து ராஜ் கட்சியின் பொதுச் செயலாளரான தோழர் ஜி. எல். தாட்டே என்பவரை பம்பாய் போலீசார் கைது செய்தனர் என்று தெரிகிறது. அவரும் இன்னும் சிலரும், எல்லா மத (ங்கள்) மாநாடு ஒன்றில் எழுந்து நின்று 'பசுவதையைத் தடை செய்' எனக் கூச்சலிட்டனராம்.

அந்த மாநாட்டின் துவக்க உரையை ஆற்ற பம்பாய் முதன் மந்திரி எழுந்தபொழுது, கூட்டத்திலிருந்த தாட்டேயும், அவரது கட்சியைச் சார்ந்த தோழர்கள் நான்கு பேரும், கருப்புக் கொடிகளைக் காட்டி, "பசுவதையைத் தடை செய்; மொரார்ஜி தேசாயே, திரும்பிப் போ!" என்று கூச்சலிட்டனராம்.

உடனே போலீசார் அவர்களை கூட்டத்தைவிட்டு வெளியேற்றிக் கைது செய்து காவலில் வைத்தனர் என்றும், பின் தோழர் தாட்டே ஜாமீனில் வெளிவந்ததாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

## ஒத்திவைப்பு!

தமிழ் நாட்டு காங்கிரஸ் குழுவின் கோரிக்கைக் கிணங்க, காங்கிரஸ் செயற் குழு, அடுத்த ஆண்டு ஜனவரி திங்கள் 17-ந் தேதியிலிருந்து 23-ந் தேதி வரையிலும் அகில இந்திய காங்கிரசின் மாநாட்டை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இம்முடிவுப்படி, ஜனவரி 17, 18, 19-ந் தேதிகளில் காங்கிரஸ் செயற்குழு ஆவடியில் கூடும்.

காரிய ஆலோசனைக் குழு ஜனவரி 19, 20-ந் தேதிகளில் பிற்பகலிலும், 21-ந் தேதியிலிருந்து 23-ந் தேதி வரை காங்கிரஸ் மகா சபைக் கூட்டமும் நடைபெறும்.

## பிரெஞ்சிந்திய அதிகார மாற்றம்

### பிரச்னைகளுக்கு முடிவு காண இரு நாட்டு பிரதிநிதிகள் குழு

புதுச்சேரி, நவ. 9—

இந்தியா—பிரான்ஸ் ஒப்பந்தப்படி, பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் அதிகார மாற்றம் சம்பந்தப்பட்ட எல்லா பிரச்சினைகளையும் முடிவு செய்யும் ஒரு குழுவிற்கு, பிரான்ஸ் மூன்று பிரதிநிதிகளை நியமித்துவிட்டதாகவும், இந்தியாவும், விரைவில் 3 பிரதிநிதிகளை நியமிக்கும் எனவும் தெரியவருகிறது.

இந்தியா-பிரான்ஸ் ஒப்பந்தப்படி உரிமைகள், பொறுப்புகள் ஆகியவற்றை இந்தியா மேற்கொள்ள எழும் எல்லா பிரச்சினைகளுக்கும் இக்குழு ஒரு முடிவு கூறும்.

புதுவையில், பிரெஞ்சுப் பிரதிநிதியாக இருந்த டுவான்ஷல் என்பவர், பிரெஞ்சு தூதுவராலயம் ஒன்று புதுவையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று வெளியான செய்திகள் தவறு என்று மறுத்து, சட்டபூர்வமான அதிகார மாற்றம் ஆனபின்னர்தான், பிரெஞ்சுத் தூதுவராலயம் ஏற்படுத்தும் பிரச்சினை எழுமென்றும், தற்போது பிரெஞ்சிந்தியா மீதுள்ள அரசியல் உரிமைகள் யாவும் பிரான்சுக்கே உரியது என்றும் கூறியிருக்கிறுர்.

### புதிய மாற்றம் ஏதும் இல்லை

"புதுவையில் இப்போதுள்ள புதிய நிர்வாக முறையில் எவ்வித மாற்றமும் அண்மையில் செய்வதற்கில்லை; சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஆட் குறைப்பிற்கு ஆளாகமாட்டார்கள்," என்று, புதுவை நிர்வாக பிரதம காரியதரிசியான மாத்யூஸ் அறிவித்தார்.

எல்லா இலாகாக்களின் தலைமை அதிகாரிகளும் இந்திய அரசாங்க அதிகாரிகளாகவே இருப்பர்.

நல்ல பல திட்டங்கள் தீட்டும் பொருட்டு இன்றுள்ள நிலைகளை ஆராய்ந்தறிய நிபுணர் குழு ஒன்று சீக்கிரமே புதுவைக்கு வரும்.

சர்க்காரிடமுள்ள எல்லா 'கார்'களும் விற்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் பணம் முழுவதும் புதுவை மக்களின் நலத்திற்காகச் செலவிடப்படும் என்றும் திரு. மாத்யூஸ் குறிப்பிட்டிருக்கிறுர்.

இரண்டு அரசாங்கங்களிடையேயும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை மீறுகிற செயலில் யாரும் ஈடுபடமாட்டார்கள் என்று மாத்யூஸ் உறுதி மொழி தந்தார்.

## தேசீய நாடக விழா

### நாடகப் பேராசிரியர் வேண்டுகோள்

நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியார் அவர்கள் அறிவிப்பதாவது:—

"சில நாட்களாக பத்திரிகைகள் மூலமாக டில்லியில் நடத்த வேண்டிய தேசீய நாடக விழா பிரச்சினைகளில் சென்னையிலுள்ள நாடகக் கழகம், நடிகர் சங்கம் எல்லாம் மனவித்தியாசப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டு மிகவும் மன வருத்தமடைகிறேன்.

"நான் இப்போது சொல்லப் போவது குற்றம் யார்மீது என்று கண்டுபிடித்துக் குறை கூறுவதற்கல்ல. அப்படிச் செய்வதற்கு இது சமயமுமல்ல.

"நான் கோருவதெல்லாம், டில்லியில் நடைபெறப் போகும் தேசீய நாடக விழாவில் தமிழ் நாடகங்களும், தமிழ் நடிகர்களும் நல்ல பெயர் பெற வேண்டுமென்பதேயாம். இப்பொழுது இருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த இரண்டு கோரிக்கைகளும் நிறைவேறுமென்பது என்னுடைய எண்ணம்.

"இந்த விழாவை நடத்தப் போகிற நடன, நாடக, சங்கீதக் கழகமும், சர்க்காரும், தமிழ் நாட்டிலுள்ள எல்லா நாடகச் சங்கங்களையும் கலந்து கொண்டு ஏற்பாடு செய்து என்னுடைய கோரிக்கையை நிறைவேற்ற இன்னும் காலமிருக்கிறது.

"அப்படிச் செய்தால்தான் தமிழ் நாடகத்தின் பெருமையையும், தமிழ் நடிகர்களின் பெருமையையும் டில்லியில் உள்ளவர்கள் தெரிந்து கொள்ள முடியும்.

"எனது கோரிக்கையைப் பூர்த்தி செய்வார்கள் என்று பிரார்த்திக்கிறேன்."

## சென்னையில் குறள்....

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அடுத்து திருக்குறளார் வி. முனுசாமி அவர்கள், நகைச்சுவை ததும்ப நீண்டதொரு அறிவுரை நிகழ்த்தினுர். பிறகு சென்னை நகராண்மைக் கழக உதவி கமிஷனர் என். சங்கரன் அவர்கள் குறளின் சிறப்பை விளக்கிக்காட்டினுர் அடுத்து, தோழர் சுரதா பேசிய பின்னர், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள் ஆரவாரத்துக்கிடையே எழுந்து ஒரு மணி நேரத்துக்கு மேல் 'தமிழரும்—குறளும்' பற்றி நல்லதொரு அறிவுரை நிகழ்த்தினுர்.

இரவு 10-மணிக்கு "புலிநகம்"- "குமணகாவியம்" ஓரங்க நாடகங்கள் நடைபெற்றன.

**நான்காம் நாள்:**

28—10—54 மாலை 5 மணிக்கு ஆரம்பமாயிற்று. தோழர் அன்பு கணபதி தலைமையேற்ருர். முன்னுரைக்குப் பின், தோழர்கள் தில்லை-வில்யாளன், என். வி. நடராசன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் அறிவுரை வழங்கினர்.

**ஐந்தாம் நாள்:**

29—10—54 மாலை 6 மணிக்குத் துவங்கியது. தலைவரை முன்மொழிந்து திரு. பூ. கணேசன் சிறிது நேரம் பேசிய பின்னர் திரு. சொ. அமிர்தகணேசனுர் தலைமையேற்ருர். தலைவரின் உறுதியக்கும் முன்னுரைக்குப் பின்னர், திருவாளர்கள் டாக்டர் ஆரோக்கியசாமி ச. ஆறுமுகம், பி. ஆர். மீனுட்சிசுந்தரனுர், நன்னன் ஆகியோர் தெள்ளிய தீந்தமிழில் அருங்குறளின் கீர்த்தியை விளக்கினர். தலைவர் முடிவுரைக்குப் பின், திரு. தி. சு. திரு வேங்கடம் நன்றிகூறலுடன் விழா முடிவுற்றது.

அடுத்து திரு. மா. செங்குட்டுவனின், 'குறள் தொண்டன்' ஓரங்க நாடகம் நடைபெற்றது.

ஆறும் நாளாகிய 30—10—54 அன்று இரவு 8 மணிக்கு குமாரி சரோஜாவின் நடன விருந்தும், கனல் பா. கோ. ரா.-வின், 'குறளோவியம்' நாடகமும் சிறப்புடன் நடைபெற்றது.

## ஆரம்ப உடன்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிலிருந்து ஊழியர்களை இறக்குமதி செய்த காலத்தில், ஊழியர்களுடன் தாங்கள் செய்துகொண்ட ஒப்பந்த விதிகளுக்கு மாருக, பெரும்பாலோர் விஷயத்தில் இந்திய வர்த்தகர்கள் நடந்து கொள்ளுகிருர்கள். இந்தியர்களால் நடத்தப்பட்டு வரும் ரொட்டி கிடங்கிலும், உணவு விடுதியிலும் பணிபுரியும் ஊழியர்கள் தினசரி 17 மணி நேரமும், பல சரக்கு, துணி, பெட்டிக் கடை முதலிய வர்த்தக நிலையங்களில் வேலை செய்பவர்கள் நாள் ஒன்றுக்கு 12 மணி முதல் 15 மணி நேரம் வரையில் வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது.

ஒப்பந்தத்தில் கண்டபடி ஊதியம் கொடுக்க, இந்திய வர்த்தகர்கள் முன்வருவது கிடையாது. தங்கள் விருப்பம்போல் கூலியைக் குறைத்துக் கொடுக்கிருர்கள். அப்படி கொடுக்கப்பட்டுவரும் குறைந்த கூலியையும் காலா காலத்தில் கொடுப்பது கிடையாது.

பல மாதக் கணக்கில் ஊழியர்களின் கூலியைப் பிடித்து வைத்துக் கொண்டு, அதை, தங்கள் வர்த்தகத்திற்கான மூலதனமாகப் பயன்படுத்தி வருகிருர்கள். ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு, வர்த்தகர்களால் தரப்படும் உணவோ மிக மட்டரகமானதாக இருக்கிறது.

மேற்படி குறைபாடுகள் நிறைந்த மனு, இந்திய சர்க்கார், மலாயாவில் உள்ள இந்தியத் தூதுவர், மலாயா சர்க்கார் அதிகாரி ஆகியவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

## கோவை மாவட்டக் கழகம்

### தலைவராக திரு. நல்லசேனுபதி தேர்வு

கோவை மாவட்டக் கழகத்திற்குப் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நேற்றுகூடி, பழைய கோட்டைபட்டக்காரரான திரு. நல்லசேனுபதியை தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

52 பேருள்ள மாவட்டக் கழகத்தில் காங்கிரஸ் 41; ம-சோ. 5; சுயேச்சை 5; கம்யூனிஸ்டு 1 —என்று இடங்கள் பிரிந்துள்ளன.

திரு. நல்லசேனுபதி 44 ஓட்டுக்களும், அவரை எதிர்த்து நின்ற ம.-சோ. கட்சியைச் சேர்ந்த எம். சின்னசாமி என்பவர் நான்கு ஓட்டுக்களும் பெற்றனர்; இரண்டு பேர் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யவில்லை.

33 வயது மட்டும் நிரம்பியுள்ள திரு. நல்லசேனுபதி, சுயேச்சையாக நின்று, எம்.எல்.சி. ஆனுர்; நடந்த சில மாதங்களுக்குமுன் காங்கிரசில் சேர்ந்தார்.

## மொழிவழி அமைப்பிற்கு ம. சோ. கட்சி எதிர்ப்பு!

### திரு.-தமிழ்ப் பகுதி தாயகத்துடன் இணையக்கூடாதாம்!

### திரு-கொச்சி அமைச்சர் குஞ்சுவின் குதர்க்கம்

"திரு-கொச்சியில் உள்ள பிரஜா-சோஷலிஸ்டு அரசாங்கம், திரு-தமிழ்ப் பகுதிகள், தாய்த் தமிழகத்துடன் இணைவதை நிச்சயமாக எதிர்க்கிறது; நாடு, மொழிவழி பிரிவதை இப்போதுள்ள திரு-கொச்சி அரசாங்கம் ஆதரிக்கவில்லை,"

—என்று திரு-கொச்சியின் தொழில், ஸ்தல நிர்வாக இலாகா மந்திரி பி. கே. குஞ்சு, டெல்லி செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் பத்திரிகை நிருபர்களிடை தெரிவித்தார்.

★

## பட்டம் தாணுவிற்கு அடிமேல் அடி!

லட்சுமணபுரி, நவ. 8—

திரு—கொச்சி ஆட்சி பீடத்தில் இருக்கும் பட்டம் தாணுவின் பி-சோ. கட்சி மந்திரி சபை சமீப காலத்தில் கடைபிடித்துவரும் கொள்கைகளைக் கண்டித்து, பட்டம்தாணு சர்க்கார் உடனே இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று, உத்திரப் பிரதேச பி.-சோ. கட்சியின் செயற் குழுக் கூட்டம் 3 நாள் விவாதத்திற்குப் பின்னர் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

★

### பட்டத்தின் வாதம்!

பட்டம் தாணு சர்க்கார் உடனடியாக இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்ற ஆந்திர பி.-சோ. கட்சி நிர்வாகக் குழு கூட்டத்தின் தீர்மானத்தை நிராகரித்துப் பேசுகையில், பட்டம் தாணு கூறியதாவது:—

"ஒரு மாநிலத்திலுள்ள பி.-சோ. நிர்வாகக் குழு, மற்ரெரு மாநிலத்திலுள்ள தனது கட்சி சர்க்கார் இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கூறுவது சரியல்ல; இது போன்ற பிரச்சினைகளில் தலையிட்டு யோசனை கூறவேண்டியவர்கள், தேசீய பி.-சோ. நிர்வாக சபையேயன்றி, வேறல்ல."

## டாக்டர் பதேமியின் இறுதி அப்பீல் நிராகரிப்பு

ஈரான் நாட்டின் முன்னுள் வெளிநாட்டிலாகா மந்திரியான பதேமிக்கு இராணுவ உயர்நீதி மன்றம், இராஜத்துரோக குற்றத்திற்காகத் தந்த தூக்குத் தண்டனையை எதிர்த்து, அவர், ஈரான் மன்னரிடம் செய்திருந்த இறுதி அப்பீலை எற்றுக்கொள்ள மறுத்துவிட்டதின் மூலம், மன்னர் ஷா, டாக்டர் பதேமியின் தூக்குத் தண்டனையைஊர்ஜிதம் செய்துள்ளார்.

இதன்படி, டாக்டர் பதேமிக்கு எப்போது, எங்கு தண்டனை நிறைவேற்றப்படும் என்று இன்னும் தங்கட்கு தெரியவில்லை என்று இராணுவ அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ.